தினமணி பத்திரிகைக்கு ரூ. 3,070. தினத் தந்தி, மாலை முரசு பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டது. அவர்கள் கூட்டுறவுத் துறையிலிருந்து ஏதாவது விளம்பரம் செய்வதாக இருந்தால், அவர்கள் மக்களின் நன்மையைக் கருதி, அந்த விளம்பரத்தைச் செய்ய வேண்டுமே தவிர, வேறு எந்த விதமான பிரதி பலனையும் ஒரு நயா பைசா கூட கேட்கக் கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் முழுப்பக்க விளம்பரம் செய்யப்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. PRIVILEGE MOTION

THIRU G. VASANTHA PAI : I want to bring to the attention of the Hon. Chairman that I intended to move a motion of breach of privilege, with the consent of the Chair, after question-hour. When I met the Hon. Chairman at 3-50 p.m., he said that I could move it tomorrow. In the meantime, I have got a letter that you have withheld your consent. May I have an opportunity to convince the Chairman so that I may be given permission to move the motion ?

MR. CHAIRMAN : No.

III. ANNOUNCEMENT *re* Message from the Assembly

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970) and the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.

IV. CALLING ATTENTION TO THE CONSTRUCTION OF DAMS BY THE GOVERNMENT OF MYSORE ACROSS THE RIVER CAUVERY

*THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Public Works to a matter of urgent public importance, namely, the construction of dams by the Government of Mysore, across the river Cauvery and the consequent damage that may be done to the rice bowl of the State, Thanjavur District.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தமிழ் நாட்டுக்கும் மைசூருக்குமிடையே 1892-லும்1924-லும் ஏற்பட்டஒப்பந்தங்களைமீறி மைசூர் அரசு, காவிரி ஆற்றின் நதிகளுக்குக் குறுக்கே கீழ்க்காணும் பாசனத் திட்டங்களை முனைந்து நிறைவேற்றி வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவர்.

1. ஹேமாவதி
2. கபினி
3. சுவர்ணதி
4. ஹரங்கி

மைசூரின் ஹேமாவதி திட்டத்தைப் பற்றிக் கலந்து பேச 1968 ஆகஸ்ட் திங்களில் டாக்டர் கே. எல். ராவ் தலைமையில் மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திரப் பட்டீலும் தமிழ் நாடு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த முதல் அமைச்சர் அவர்களும் கலந்து

4-20 p.m. கொண்ட கூட்டத்தில் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி நமக்குச் சேர வேண்டிய வரையறைக்குட்பட்ட தண்ணீர் அளிக்கும் வாக்குறுதியைத் தாம் மதித்து நடப்பதாகத் திரு. வீரேந்திர பட்டீல் நமக்கு அளித்த உறுதிமொழியை இங்கு நினைவு கூறலாம். இப்பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து ஹேமாவதி திட்டத்திற்கு நமது இசைவை அளிப்பதற்கு முன்பாக, சில விளக்கங்களையும் உறுதிமொழிகளையும் நாம் வேண்டினோம். நமது கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து அத்தகைய உறுதிமொழி எதுவும் தமிழ் நாட்டிற்குக் கொடுக்கப்படவில்லை என்றும், மத்திய நீர்—மின் சக்தி ஆணைக்குழுவின் தொழில் நுட்ப அனுமதியுடனே அனுமதியின்றியோ தனது திட்டங்களை மைசூர் நிறைவேற்றும் என்றும் மைசூர் முதல்வர் மைசூர் சட்டமன்றத்தில் தெரிவித்தார். மைசூரின் இந்த மனப்போக்கைக் கருதி இவ்வரசு இந்த நிலைமையின் விபரீதத்தை இந்தியப் பிரதமருக்கு வலியுறுத்தி எழுதியது. மேலும் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் தீர்க்கப்படுகிற வரையில் மைசூர் தொடங்கியுள்ள பாசனத் திட்டங்களை உடனடியாக நிறுத்த பிரதமர் தலையிட வேண்டுமென்று இம்மாநில அரசு அவரை வேண்டிக் கொண்டது. இத்தகைய கருத்து வேறுபாடுகளை இணக்கமான முறையில் தீர்த்து வைக்க மத்தியப் பாசன மின்சக்தி அமைச்சர் டாக்டர் கே.எல். ராவ் முற்படுவாரென நமக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் டாக்டர் கே. எல். ராவ் செய்த முயற்சிகள் பயனற்றுப்போயின. இப்பாசனத் திட்டங்களை ஒரு சார்பாக நிறைவேற்ற மைசூர் அரசு முனைந்ததால் இவ்வரசு இந்திய அரசுடன் மீண்டும் இது பற்றிக் கடிதத் தொடர்பு கொண்டன. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மைசூர் இணங்கும் வகையில் உடனடி நடவடிக்கை எடுக்காவிடில் நடுவர் மன்ற தீர்ப்புக்கு இதை விட வேண்டும் என்று நாம் குறிப்பிட்டோம். இதை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுவதன் முன்னர் மைசூர் அரசுடன் மீண்டும் இந்தப் பிரச்னை குறித்துப் பேசிப் பார்ப்பதாக இந்திய அரசு கூறியது.

இந்தப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இந்திய அரசு அதிகாரிகள் அளவில் 1970 ஜனவரி 27, 28-ஆம் தேதிகளிலும் அமைச்சர்கள் அளவில் 9—2—1970 தேதியிலும் புது டில்லியில் மாநாடுகளைக் கூட்டி

யது. இங்கு நடைபெற்ற விவாதங்களிலே இவ்வரசு கோரிய இரு உறுதிமொழிகளை நமக்குத் தர மைசூர் பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர். அவையாவன :

(1) மைசூர் 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களுக்கு இணங்கும்.

(2) மேற்கொண்டு விவாதங்கள் முடிகிற வரையில் பாசன பணிகள் தொடர்ந்து நடத்தப்படமாட்டா.

மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு இவ்விரு உறுதி மொழிகளும் முன் நிபந்தனையாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

மைசூர் அரசின் மேற்சொன்ன நிலையையொட்டி இந்த விபரீத நிலைமையைப் பிரதமருக்கு 17-2-1970 அன்று நாம் தெளிவுபடுத்தினோம். நடுவர் மன்றத்திற்கு உடனடியாக இந்தத் தகராறை அனுப்புமாறு கேட்டு இந்திய அரசுக்கு விரிவான கடிதம் ஒன்றும் எழுதினோம்.

டாக்டர் கே. எல். ராவ் முதல்வர்கள் மாநாடு கூட்டி தகராறுக்குரிய விஷயங்களைப் பற்றித் தீர்வுக்கு வரலாம் என்று ஆலோசனை கூறினர். இவ்வகையில் முதல் கூட்டம் புது டில்லியில் 17-4-1970 அன்றும் இரண்டாவது கூட்டம் 16-5-1970 அன்றும் நடைபெற்றன. 16-5-70 அன்று நடைபெற்ற விவாதங்களின் முடிவில் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள், மத்திய நீர் மின்சக்தி ஆணைக்குழுத் தலைவரின் தலைமையில் இவ்விரு மாநிலங்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க கபின், ஹேமாவதி திட்டங்களின் ஒழுங்கு முறை விதிகளைத் தயாரிக்க வேண்டுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

இதையொட்டி தலைமைப் பொறியாளர்கள் புது டில்லியில் 1970 ஜூலை 13, 14-ஆம் தேதிகளில் விவாதம் நடத்தினர். எனினும் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் ஒழுங்குமுறை விதிகளைத் தயாரிக்க மைசூர் தலைமைப் பொறியாளர் மறந்துவிட்டார். தங்கள் முன் வைக்கப்பட்ட குறிப்பாக இந்தப் பிரச்னையில் கூட ஒருமுகமான முடிவு காணமலேயே தலைமைப் பொறியாளர்கள் அவரவர் மாநிலங்களுக்குத் திரும்பினர். இருந்த போதிலும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க மைசூர் பாசனத் திட்டங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள் தயாரிக்கப்படுமென்று டாக்டர் கே. எல். ராவ் திட்டவட்டமாக அளித்த உறுதி மொழியின் மேல் 31—8—70 அன்று நடைபெற்ற விவாதக் கூட்டத்தில் கலந்து கொள்ள நமது தலைமைப் பொறியாளரை அனுப்பி வைப்பதற்காக நாம் ஒப்புக்கொண்டோம். இந்தக் கூட்டத்தில் ஒருமைப்பட்ட முடிவுக்கு வர இயலவில்லை.

தலைமைப் பொறியாளர்கள் அளவில் நடைபெற்ற விவாதங்கள் தோல்வியுற்ற போதிலும், இறுதியான முடிவெடுப்பதற்காக டாக்டர் கே.எல்.ராவ் மூன்று மாநில முதல்வர்கள் மாநாட்டைப் புது டில்லியில்

12-10-70 அன்று கூட்டினர். மைசூர் அரசு மேற்கொண்டும் விவாதம் நடத்தலாம் என்று கேட்டுக்கொண்டிருக்கையிலே, அணை கட்டும் பணிகளை நடத்தி வருகிறது என்பதை நாங்கள் சுட்டிக் காட்டிய போதிலும், இறுதிப் பேச்சு வார்த்தைகளை 27-10-1970 அன்று சென்னையில் வைத்துக் கொள்வதென அப்பொழுது முடிவு செய்யப் பட்டது. மைசூரில் நீர்த் தேக்கங்கள் கட்டும் பணிகள் இந்த ஒப்பந் தத்தின்படியே திட்டமிட்டுள்ள போதிலும், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க மைசூர் முதல்வர் தயாராக இராத தால், சென்னையில் 27-10-1970 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தை களும் முறிந்தன. இவ்வாறாக பேச்சு வார்த்தைகளின் மூலம் தகராறைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போன தாலும், 1924 ஆண்டு ஒப்பந்த நிபந்தனைகளின் படி நடக்க மைசூர் அரசு தயாரில்லை என்ற நிலை உருவாகியுள்ள இந்தத் தகராறை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதைத் தவிர, நமக்கு வேறு வழியில்லை. இதற்கிணங்க மேலும் காலதாமதம் செய்யாமல் இத்தகராறினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடவேண்டிய அவசியத்தையும், அப்படி விடாவிட்டால் தஞ்சாவூர் வடிநிலப் பகுதியில் நமது வாய்ப்புகள் மிகவும் பாதிக்கப்படு மென்பதைப் பற்றியும் பிரதமருக்கு மீண்டும் வலியுறுத்தி 8-11-70-ல் அவருக்குக் கடிதம் எழுதியுள்ளோம்.

*THIRU G. SWAMINATHAN : With the permission of the Chair, I want to get a clarification. The Hon. Minister has just now stated that the matter is to be referred to a Tribunal and that we have requested the Central Government to refer the matter to a Tribunal. We have known very well that it takes many years for the Tribunals to give a decision. Meanwhile the Government of Mysore may be proceeding to construct dams across the river Cauvery. I want to know whether our Government have got any proposal to avert such construction of dams, perhaps by getting a stay from the Central Government in any manner possible.

4-30 p.m. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்த வரையிலே எல்லா நடவடிக்கை களையும் எடுத்துக்கொண்டோம். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில் இதற்கு ஒரு நல்ல சுமுகமான முடிவைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் தொடர்ந்து நாங்கள் பேச்சுவார்த் தை நடத்தினோம். ஆனால் மைசூர் மாநில முதலமைச்சரின் பேச்சும், பத்திரிகைச் செய்திகளும் அதை நிறைவேற்றித் தரவில்லை. மேலும் நாம் கேட்ட இரண்டு உறுதிமொழிகளையும் அவர்கள் தராத காரணத் தாலும், இந்தப் பிரச்னையை நடுவர் மன்றத்துக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தாலும், நாம் நடுவர் மன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று இந்தியப் பிரதமரைக் கேட்டுக்கொண்டிருக் கிறோம். அது இப்பொழுது மத்திய அரசிலே ஆலோசனையிலே இருக் கிறது. மிக விரைவாக முடிவுக்கு வரும் என்று எதிர் பார்க்கிறோம்.

*THIRU A. R. DAMODARAN : One more clarification, Sir. In newspapers we have seen a report that quite apart from referring the matter to the Tribunal, the Central Government seem to have decided to constitute a committee of the Lok Sabha Members to go into this question and it is likely to delay the matter further.

THIRU K. RAJARAM : It is foi settlement of border disputes.

V. GOVERNMENT RESOLUTION

(1) *The Tamil Nadu Municipal Service Rules*, 1970

(2) *The Tamil Nadu Municipal Services (Discipline and Appeal) Rules*, 1970

(3) *The Tamil Nadu Municipal Services Pension Rules*, 1970

THE HON. THIRU P.U. SHANMUGHAM : Sir, I move—

"That the Resolution carried in the Tamil Nadu Legislative Council on the 30th November 1970, in pursuance of section 305-A of the Tamil Nadu District Municipalities Act, 1920, approving the Tamil Nadu Municipal Service Rules, 1970, the Tamil Nadu Municipal Services (Discipline and Appeal) Rules, 1970, and the Tamil Nadu Municipal Services Pension Rules, 1970, be rescinded and that this House do permit the Hon. the Minister for Food and Local Administration to withdraw the resolution."

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் காலம் கடந்தாவது இப்பொழுது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நேற்று நிறைவேற்றிய தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இனிமேலாவது அரசாங்கம் இம்மாதிரி முக்கிய விஷயங்களைச் சற்றுப் பொறுமையுடன், அவசரப் படாமல், பரிசீலனை செய்து, சபைக்குக் கொண்டுவருவதற்கு முன்னால் நன்றாக ஆலோசனை செய்து கொண்டுவர வேண்டும். அதுவும் பல்லாயிரக் கணக்கான பேர்களை பாதிக்கக்கூடிய விதிகளைத் திருத்தும்போது சற்று நன்றாக ஆலோசிக்க வேண்டும் என்று இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[Deputy Chairman in the Chair].

THIRUMATHI S. MANJUBHASHINI : On a point of clarification, Sir. It must be a typographical error to state " be rescinded " instead of " be rescinded."

மாண்புமிகு திரு. பி.யு. ஷண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் விவாதத்தின்போது மதிப்புக்குரிய திரு. ராஜா ஐயர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்பொழுதே நான் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று பார்த்தேன். அதுவும் இல்லாமல் அச்சுப் பிழைகள் வேறு நிறைய இருக்கின்றன. அவைகளையெல்லாம்